# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

# 1983 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க,
# கடன் இணக்க (திருத்தச்) சட்டம்

*[1983, ஜூன் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1983, ஜூன் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 35* *தபாற் செலவு : சதம் 50*

**1983 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கடன் இணக்க (திருத்தச்) சட்டம்**

*[1983, ஜூன் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ.—ஓ. 18/81
1493

## கடன் இணக்கக் கட்டளைச்சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கடன் இணக்க (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தொன்பதாம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்டதான (இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 19அ என்னும் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— 81 ஆம் அத்தியாயத்தின் 19அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"(1) இக்கட்டளைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஈடொன்றாகவுள்ள அசைவற்ற ஆதனத்தின் நிபந்தனையுடன்கூடிய கைமாற்றம் எதனாலும் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும் கடன் ஒன்று தொடர்பில், கடன்பெறுநரினால் அல்லது கடன்கொடுநரினால் செய்யப்படும் விண்ணப்பம் எதுவும் கடன்பெறுநருக்கும் கடன்கொடுநருக்குமிடையேயுள்ள சட்டப்படி வலியுறுத்தற்பாலதான ஏதேனும் உடன்படிக்கையின் பயனாக அவ்வாதனம் அக்கடன்பெறுநரினால் எக்காலப் பகுதிக்குள்ளாக மீட்கப்படலாமோ அக்காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் செய்யப்பட்டாலொழிய, அத்தகைய விண்ணப்பம் எதனையும் சபை ஏற்றுக்கவனித்தலாகாது.".

3. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தொன்பதாம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின 64 ஆம் பிரிவானது, "கடன்பெறுநர்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்

'"கடன்பெறுநர்" என்பது —

(i) ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின்மீது அல்லது அதன் ஏதேனும் பகுதியின்மீது ஈடொன்றை அல்லது பொறுப்பொன்றை உருவாக்கியுள்ளவரும் அத்தகைய ஆதனம் தொடர்பில் அவரது கடன்கள் விதித்துரைக்கப்பட்ட தொகையினை விஞ்சுகின்றவருமான ; அல்லது

(ii) நிபந்தனையுடனான கைமாற்றம் ஒன்றின்மீது மீட்கும் உரிமையைக் கைமாற்றம் பெற்றவரான,

ஆள் ஒருவர் என்று பொருள்படும் என்பதோடு, அத்தகைய ஆளின் மாபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், நிருவாகிகள் என்போரையும் உள்ளடக்கும்.'.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.